தி இந்து
தமிழால் இணைவோம்

October 9, 2017

# ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் கண்காட்சி: வளர்ச்சி பாதையில் தமிழக சுற்றுலாத் துறை - ஆணையர் வி.பழனிக்குமார் பெருமிதம்

தமிழக சுற்றுலாத் துறை தொடர்ந்து வளர்ச்சி பாதையிலேயே பயணிப்பதாக தமிழக சுற்றுலாத் துறை ஆணையர் வி.பழனிக்குமார் பெருமிதத்துடன் கூறினார்.

ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் வரலாறு மற்றும் சுற்றுலாத் துறை, மதுரா டிராவல்ஸ் நிறுவனம் ஆகியவை சார்பில் ‘முழுமையான இந்திய சுற்றுலா சந்தை’ என்ற கண்காட்சி ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் நடைபெற்றது.

கண்காட்சியின் தொடக்க விழாவில் தமிழக சுற்றுலாத் துறை ஆணையர் வி.பழனிக்குமார், இந்திய சுற்றுலா நிறுவனத்தின் தென்மண்டல இயக்குநர் ஸ்ரீவத்ஸ் சஞ்சய், மதுரா டிராவல்ஸ் நிறுவனத்தின் தலைவர் விகேடி பாலன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விழாவில் தமிழக சுற்றுலாத் துறை ஆணையர் வி.பழனிக்குமார் பேசியதாவது: தமிழகத்தில் பனிச் சுற்றுலாவை தவிர்த்து பிற அனைத்து வகையான சுற்றுலாக்களும் உள்ளன. தொன்மையான பண்பாடும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பாரம்பரிய வரலாறும் நமக்கு உள்ளது. தஞ்சை பெரிய கோயில், மாமல்லபுரம், நீலகிரி மலை ரயில், கங்கை கொண்ட சோழபுரம் மற்றும் தாராசுரம் ஆகிய ஐந்தும் யுனெஸ்கோ பாரம்பரிய பட்டியலில் இடம்பெற்றுள்ளன. தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி என 4 சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. இத்தகைய சிறப்புகள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

2014, 2015, 2016 என தொடர்ந்து 3 ஆண்டுகளாக தமிழகம் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலாப் பயணிகள் வருகையில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. தமிழக சுற்றுலாத் துறை தொடர்ந்து வளர்ச்சி பாதையில் பயணிக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

**மாணவர்கள்..**

இந்தக் கண்காட்சியில் கேரளா, குஜராத், மகாராஷ்ட்ரா, ராஜஸ்தான் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் மலேசியா, தாய்லாந்து, ஓமன் போன்ற வெளிநாட்டு சுற்றுலாத் துறைகளின் அரங்குகள் இடம்பெற்றுள்ளன. சென்னையின் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த சுற்றுலாத் துறை மற்றும் ஓட்டல் மேனேஜ்மெண்ட் துறைகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் கண்காட்சிக்கு வந்திருந்தினர். இந்தக் கண்காட்சி நிறைவடைந்தது.